**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 03 ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

<u>O.S. NO. 09/2021</u>

**வா.சா.2**

**திரு. கொமாரசாமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில்)**

வாதி கேட்டுக்கொண்டதன்பேரில் தான் சாட்சிமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்என்றால் சொத்து பிரச்சனைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல்செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்துள்ளேன். வழக்கு சொத்து ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதியுடன் பிறந்தவர்கள் ரேவதி, பிரியா, மகேஷ்வரி, சக்திவேல் ஆகியோர்கள். கொமரமூப்பனின் வாரிசுகள் ஏற்கனவே பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள்என்றும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும், தெரிந்துகொண்டே தற்போதுபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 08-07-2011ல் வாதியும், ரேவதியும் ரொக்க தொகை பெற்றுக்கொண்டு கையெழுத்து போட்டுக்கொடுத்துள்ளார்கள் என்றால் பொய் பத்திரம் தயாரித்துள்ளார்கள். வாதி

ஏற்கனவே தாக்கல் செய்திருந்த வழக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் யார் மூலமாக தெரிந்துகொண்டேன் என்றால் வழக்கறிஞர் சொன்னார். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் தடப்பிரச்சனை உள்ளது என்றால்இல்லை. எனக்கும், கந்தசாமி என்பவருக்கும் தடப்பிரச்சனை உள்ளது என்றும், அது சம்பந்தமாக கோபி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 26/2024 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஆதரவாக பிரதிவாதிகள் செயல்படவில்லை என்பதால் வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.